**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 87/2013 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 6 |
| | Defence |
| | Court |
| Name | கோகுல்ராஜன் |
| Father's Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

Signature of Interpreter

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்பொழுது திருவண்ணாமலை மாவட்ட மதுவிலக்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறனே். இதற்கு முன்பு கடந்த 2012 ல் விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தபோது குற்ற எண். 818/2012 என்ற வழக்கினை சிறப்பு உதவி ஆய்வாளர் கன்னியப்பன் அவர்கள் மேற்படி வழக்கு கோப்பினை என்னுடைய பார்வைக்கு வைத்தார். நான் மேற்படி வழக்கு கோப்பினை பார்வையிட்டு இவ்வழக்கில் சாட்சியாக இருந்த சீனிவாசன், மோகன், பொன்மொழி, ராஜமாணிக்கம் ஆகியோர்களை விசாரித்தேன். அவர்கள் ஏற்கனவே சிறப்பு உதவி ஆய்வாளர் கன்னியப்பனிடம் கூறியது போல் என்னிடம் கூறியதால் நான் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரி முரளியிடருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் கன்னியப்பன் கைப்பற்றப்பட்ட சான்று பொருள் 47 செ.மீ. நீளம் உள்ள தகர கத்தி ஒன்றையும் இரண்டாம் எதிரியிடம் இருந்து 52 செ.மீ. நீளம் உள்ள உருட்டு தடி ஒன்றையும் எதிரிகள் ஐவரும் சம்பவ இடத்தில் விட்டுசென்ன 53 செ.மீ. நீளம் உள்ள தடி ஒன்றையும், 52 செ.மீ. நீளம் உள்ள தடி ஒன்றையும் மற்றும் 54 செ.மீ. நீளம் உள்ள தடி ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். முதல் எதிரியுடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தி அ.சா.பொ.1 ஆகும். இரண்டாம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 52 செ.மீ. நீளம் உள்ள உருட்டு தடி அ.சா.பொ.2 ஆகும். 53 செ.மீ. நீளம் உள்ள தடி அ.சா.பொ.3 ஆகும். 54 செ.மீ. நீளம் உள்ள தடி அ.சா.பொ.4 ஆகும். 52 செ.மீ. நீளம் உள்ள தடி அ.சா.பொ.5 ஆகும். அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.5 பொருட்களை படிவம்

91 மூலம் நீதித்துறை நடுவர் எண்.1 க்கு உதவி ஆய்வாளர் அனுப்பி வைத்தார். அந்த படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் நிருபணம் ஆனதால் அவர்களுக்கு எதிராக இதச பிரிவு 399ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>1 முதல் 5 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்த குறித்த விபரத்தை என்னிடம் எப்பொழுது தெரிவித்தார் என்றால் அவருடைய முதல் புலன் விசாரணை முடித்த பின்னர் தான் என்னிடம் தெரிவித்தார். உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை மேற்கொண்டு எதிரிகளை கைது செய்யும் பட்சத்தில் அது குறித்த விபரத்தை உயர் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் காவலர்கள் பொது நாட்குறிப்பில் விபரத்தை பதிவு செய்துவிட்டு தான் செல்வார்கள் என்றால் சரிதான். அந்த பொது நாட்குறிப்பை இந்த வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கு காவல் நிலையத்தில் ஏற்கனவே வழக்கிற்கு முன்னர் சில வழக்குகள் நிலுவையில் இருந்து வந்தது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் காவல் நிலைய புள்ளி விவர கணக்கிறாக வேண்டி இந்த வழக்கினை அவர்களுக்கு எதிராக ஆவணங்களை ஜோடித்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறாகும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் உதவி ஆய்வாளர் எந்த ஒரு சான்று பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் எந்த ஒரு எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து

அனைத்து ஆவணங்களையும் சான்று பொருட்களையும் இவ்வழக்கிற்காக வேண்டி தயார் செய்து உதவி ஆய்வாளர் பொய்யாக தயாரித்த வழக்கிற்கு நான் எந்தவித மறு விசாரணையும் செய்யாமல் எந்த ஒரு சாட்சியையும் மறுவிசாரணை செய்யாமல் அந்த ஆவணத்தின் அடிப்படையில் தவறாக எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்